**செய்தி வெளியீடு எண்: 649** **நாள்:08.09.2020**

**<u>இன்று (08.09.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

அனைவருக்கும் வணக்கம்.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு ஏறக்குறைய 5 மாத காலத்தில், உயரதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக இந்நோய்ப் பரவல் கட்டுக்குள் உள்ளது. இந்நோய்ப் பரவல் தொடர்பாக தமிழகத்திலும் அண்டை மாநிலங்களிலும் இருக்கிற வித்தியாசம் குறித்தும், நம்முடைய உயரதிகாரிகள் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகளைப் பின்பற்றி எடுத்த நடவடிக்கைகள் காரணமாக இந்நோய்ப் பரவல் படிப்படியாக தமிழகத்தில் குறையத் தொடங்கியுள்ளது.

நம்முடைய மருத்துவ வல்லுநர்கள், உயரதிகாரிகளுடனான கூட்டத்தில், பரிசோதனையை அதிகப்படுத்த வேண்டுமென்று வழங்கிய ஆலோசனைப்படி நாளொன்றுக்கு சுமார் 85 ஆயிரம் வரை பரிசோதனை மேற்கொண்டதன் விளைவாக கொரோனா வைரஸ் தொற்று பரவல் குறைக்கப்பட்டிருக்கிறது. பரிசோதனையை அதிகரித்த காரணத்தால்தான் மதுரையில்கூட நோய்ப்பரவல் படிப்படியாகக் குறையத் தொடங்கியுள்ளது என்ற ஒரு கருத்தை சுகாதாரத் துறைச் செயலாளர் சொன்னார்கள். அதிக பரிசோதனை மேற்கொண்டு, நோய்த் தொற்று அறிகுறி உள்ளவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கிறோம். அவ்வாறு அதிக பரிசோதனை செய்யாதபட்சத்தில், நோய்த் தொற்றுக்கு ஆளானவர்கள் மூலம் அந்நோய் மற்றவர்களுக்கும் பரவி, நோய்ப் பரவல்

அதிகரிக்கும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு, பரிசோதனையை அதிகப்படுத்த வேண்டுமென்று அரசு அறிவித்தது. அதன்படி, பல்வேறு மாவட்டங்களிலும் சுகாதாரத் துறையால் வேகமாக, துரிதமாக, பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சென்னையைப் பொறுத்தவரை கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மூலம், தற்பொழுது குறையத் தொடங்கி, ஆயிரத்திற்கும் கீழுள்ளது. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் காய்ச்சல் முகாம்கள் நடத்தி, அதில் ஆயிரக்கணக்கானோர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அறிகுறி தென்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்த காரணத்தாலும், சென்னையைப் பொறுத்தவரை, மாநகராட்சி அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று காய்ச்சல் மற்றும் வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்த காரணத்தாலும் இந்நோய்ப் பரவல் தமிழகத்தில் படிப்படியாகக் குறையத் தொடங்கியுள்ளது.

நேற்றிலிருந்து, ஒரு சில துறைகளைத் தவிர்த்து, எல்லாவற்றிற்கும் தளர்வுகள் கொடுத்துள்ளோம். தமிழகத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் செல்வதற்கு போக்குவரத்து வசதி செய்து கொடுத்துள்ளோம். குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்கள் அனைத்தும், அனைத்துக் கடைகள், வங்கிகள் 100 சதவிகிதப் பணிகளைத் தொடங்கலாம் என்றும் அறிவித்துவிட்டோம். தற்பொழுது தங்குதடையில்லாமல் அனைத்து இடங்களுக்கும் சென்று வரக்கூடிய சூழ்நிலை இருப்பதால், பொதுமக்கள் கவனமாக இருக்க வேண்டும். இதற்கு முன்பு ஊரடங்கு, இ–பாஸ் முறை இருந்ததால் மக்கள் எங்கே செல்கிறார்கள் என்று தெளிவாகத் தெரிந்தது. தற்பொழுது மக்கள் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று வருகிற

காரணத்தால், இந்நோய்ப் பரவலை கண்டுபிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதால் அனைத்துத் துறை அதிகாரிகளும் ஒன்றாக இணைந்து பணியாற்றி, கவனமாக இருந்து இந்த நோய்ப் பரவல் மேலும் பரவாமல், படிப்படியாக குறையக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் மேலும் தொடர்ந்து இருக்க வேண்டும், அங்குள்ளவர்களை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். அவ்வாறு கண்காணிக்கத் தவறினால் மற்றவர்களுக்கு நோய்த் தொற்று பரவக்கூடிய சூழ்நிலை உள்ளதால், கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஏற்கனவே, சுகாதாரத் துறை கேட்டுக் கொண்டதற்கிணங்க, காலியாகவுள்ள இடங்களில் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்களை நியமித்திருக்கின்றோம். இன்னும், கூடுதலாக நியமிக்க வைத்த கோரிக்கையை நிறைவேற்ற அரசு தயாராக உள்ளது.

தற்பொழுது, கொரோனா தொற்று குறித்த ஐயப்பாடு இருக்கின்ற நிலையில், சாதாரண காய்ச்சல் மற்றும் மற்ற நோய்களுக்கு சிகிச்சை பெறமுடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் **பொதுமக்களுக்கு அன்றாடம் ஏற்படும் நோயை குணப்படுத்த, தமிழகம் முழுவதும் 2,000 Mini Clinic ஏற்படுத்த அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், மாநகராட்சி, நகராட்சி, பெரிய கிராமங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத இடங்கள் அடங்கும்.** இந்த Mini Clinic-ல் தேவையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளுடன் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் இடம்பெறுவர். காய்ச்சல், தலைவலி போன்ற எளிதாக சிகிச்சை அளிக்கக்கூடிய நோய்களுக்கு அந்த Mini Clinic–ல் மருந்துகள் வழங்கப்படும்.

அனைவரும் முகக்கவசம் கண்டிப்பாக அணிய வேண்டும். எனவே, காவல் துறை, சுகாதாரத் துறை, உள்ளாட்சித் துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கி, முகக்கவசம் அணியாதவர்களுக்கு அபராதம் விதிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். முடிந்தளவு விழிப்புணர்வு ஏற்படுத்தி முகக்கவசம் அணியச் செய்ய வேண்டும். இது மிக, மிக முக்கியம்.

இப்பொழுது ஊரடங்கு தளர்த்தப்பட்ட காரணத்தால், இறைச்சிக் கடைக்கும், மீன் கடைக்கும் மக்கள் கூட்டம், கூட்டமாக செல்கின்றார்கள், அதைத் தவிர்க்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை காசிமேடு பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் முகக்கவசம் அணியாமலும், சமூக இடைவெளியை பின்பற்றாமலும் ஒரே இடத்தில் கூடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மீன்வளத் துறை, காவல் துறை, உள்ளாட்சித் துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள், மக்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவலைத் தடுக்க வேண்டும்.

மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மெரினா பீச்சில் மக்கள் கூடாமல் இருப்பதை காவல் துறை உறுதி செய்ய வேண்டும். மேலும் மெரினா பீச்சில் உள்ள கடைகளில் உள்ளவர்களுக்கு கொரோனா நோய்த் தொற்று இருந்தால், அவர்களிடம் வாங்குபவர்களுக்கும் கொரோனா நோய்த் தொற்று வருவதற்கு வாய்ப்புள்ளது. எனவே, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அங்கே கூட்டம் கூடாமல் இருப்பதற்கு காவல் துறை தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதனால் கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டு மருத்துவமனைக்கு வருபவர்களை உடனடியாக சிகிச்சைக்கு அனுமதித்து அவர்களுக்கு முதலுதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டு, அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு வருகின்றவர்களை

உடனடியாக சிகிச்சைக்கு அனுமதிக்க வேண்டுமென்று சுகாதாரத் துறையை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரை, இப்பொழுது மழைக் காலம் தொடங்கிவிட்டதால், கொரோனா நோய்த் தொற்று மட்டுமல்ல, டெங்கு வருவதற்கும் வாய்ப்பிருக்கின்றது. இப்பொழுது பல இடங்களில் மழை பெய்து கொண்டிருக்கிறது. மாநகராட்சிகள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் ஆங்காங்கே தேங்கியிருக்கும் தண்ணீரை அப்புறப்படுத்த வேண்டும். கொரோனா நோய்த் தொற்று அதிகமாக இருக்கும் இடங்களில், பெருநகரப் பகுதிகளில் அடிக்கடி கிருமி நாசினி அடிக்க வேண்டும், பொதுக் கழிப்பறைகளை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். தண்ணீர் எங்கும் தேங்காமல் பார்த்துக் கொண்டால் தான் டெங்கு கொசு ஏற்படாமல் இருக்கும். ஏனென்றால், காய்ச்சல் எதற்கு வருகிறது என்று கண்டுபிடிக்க முடியாது. காய்ச்சல் வந்தால் கொரோனா நோய்த் தொற்று இருப்பதாக ஒரு ஐயப்பாடு இருக்கின்ற இந்த சூழ்நிலையில், டெங்கு காய்ச்சல் வருகின்றபொழுது பெரும் பிரச்சினையாகி விடும். ஆகவே, டெங்கு காய்ச்சல் வராமல் இருப்பதற்கும், அதைத் தடுப்பதற்கும், அறவே ஒழிப்பதற்கும் உள்ளாட்சித் துறை கவனமாக இருந்து அதை செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் 100 சதவீதம் திறக்கப்பட்டு விட்டது. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 300 முதல் 400 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் வருகின்றபொழுது தெர்மல் ஸ்கேன் வைத்து பரிசோதனை செய்கிறார்களா, முகக்கவசம் அணிகிறார்களா, சமூக இடைவெளியை பின்பற்றுகிறார்களா, கழிப்பறைகளை சுத்தமாக வைத்திருக்கிறார்களா போன்றவற்றை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும்.

அப்பொழுதுதான் அங்கு யாருக்கும் கொரோனா நோய்த் தொற்று ஏற்படாமல் தடுக்க முடியும். அவ்வப்போது தொழிற்சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து, தொழில் முதலீட்டாளர்களை 15 நாட்களுக்கு ஒருமுறை கூட்டத்தைக் கூட்டி கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும். எல்லா மாவட்டத்திலும் தொழிலாளர் துறை இருக்கின்றது. தொழிலாளர் துறை உயர் அதிகாரிகள் அங்கே இருக்கும் தொழிலதிபர்களை அழைத்து அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். அரசால் அறிவிக்கப்பட்ட வழிமுறைகளை பின்பற்றுகிறார்களா என்று அவ்வப்போது தொழிற்சாலைகளை ஆய்வு செய்ய வேண்டும். மேலும், தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் மதிய உணவு உண்ணும்போதும் சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டுமென்ற விழிப்புணர்வை நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

இன்னும் கூடுதலாக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை தேவைப்படுகிறதென்று சுகாதாரத் துறை செயலாளர் குறிப்பிட்டார்கள். எனவே, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் காலிப் பணியிடங்கள் முழுவதும் நிரப்பப்படும், ஏனென்றால், **தமிழகத்தை பொறுத்தவரை ஒரு உயிர் கூட இழப்பதற்கு அரசு அனுமதிக்காது, ஒவ்வொரு உயிரும் அரசுக்கு முக்கியம். அதனடிப்படையில் இன்று வரை நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு செலவானாலும், எவ்வளவு நிதிச்சுமை ஏற்பட்டாலும் பரவாயில்லை, மனிதனுடைய உயிரைக் காப்பாற்றுவது அரசினுடைய கடமை. அந்த அடிப்படையில் தான், நம்முடைய அதிகாரிகள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் சொல்கின்ற ஆலோசனைகளின்படி அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.** ஆகவே, பொதுமக்கள் விழிப்போடு இருக்க வேண்டும் என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் எவ்வளவுதான்

முயற்சி செய்தாலும், பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல், கொரோனா நோய் பரவலைத் தடுக்க முடியாது. அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை முழுமையாக பொதுமக்கள் பின்பற்றினால் தான் இந்த நோய்ப் பரவலைத் தடுக்க முடியும். அதேபோல், கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து குணமடையச் செய்ய அரசு தயாராக இருக்கின்றது. இன்றைக்கு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில், இறப்பு சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. திருவள்ளூர் மாவட்டத்தில்கூட, நேற்றையதினம் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், மருத்துவமனையில் சிறந்த முறையில் சிகிச்சை அளித்ததாகவும், ஒரு சுற்றுலா வந்துவிட்டு சென்றதுபோல் இருந்ததே தவிர, நோய்த் தொற்று ஏற்பட்டு வந்துவிட்டு சென்றதுபோல இல்லை என்று ஒரு பெண்மணி சொன்னார்கள். அந்த அளவிற்கு நம் அரசு இயந்திரம், அரசு அதிகாரிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு, மக்களுக்கு சேவை செய்வதில் இந்தியாவிலேயே, தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்ற பெருமையை நீங்கள் உருவாக்கித் தந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் அனைவரும், அருள்கூர்ந்து அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை பின்பற்றுங்கள், நாம் விரைவாக இயல்பு நிலைக்கு திரும்பலாம். இந்த நோய்ப் பரவலிலிருந்து மக்களை காப்பதற்கு அரசு எடுக்கின்ற முயற்சிக்கு துணை நிற்க வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**